★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 53690

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily ✱ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: ஆவணி 6உ செவ்வாய் (21—8—56) ★ ★ வெளியூர் : ஆவணி 7உ புதன் (22—8—56) [இதழ் 61

விவசாயத் திட்டங்களை நிறைவேற்ற 7,000 பட்டதாரிகள் தேவையாம்

புதுடில்லி, ஆக. 20—

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் விவசாயப் பிரிவினை நிறைவேற்றுவதற்கு மட்டும் சுமார் 7,000 பட்டதாரிகள் உடனடியாகத் தேவைப்படுகிறார்கள் என்று கூறப்படுகிறது.

மாநில—மத்திய சர்க்கார்கள் விவசாயக் கல்லூரிகளில் ஆண்டொன்றுக்கு 400 மாணவர்களை அதிகம் சேர்த்துக் கொள்வதின் மூலம் இந்தத் தேவையைப் பூர்த்தி செய்ய எண்ணுகின்றனராம்!

பிரகடனப்படுத்தப்படுவதெல்லாம் குடியரசு ஆகிவிட முடியாது

குறைபாடுகளை ஒப்புக்கொள்ளும் தனிப் பெருமை குடியரசு முறைக்கே உண்டு

சர்வாதிகார அரசு முறையின் பயங்கரக் குறைபாடுகள் குடியரசில் கிடையாது

சென்னை தியாகராயர் கல்லூரியில் ஈ. வெ. கி. சம்பத் முழக்கம்

"'குடியரசு' என்ற தலைப்பில் என்னைப் பேசுமாறு இந்த தியாகராயர் கல்லூரி நுண்கலை மன்றத்தவர் பணித்தபோது, நான் என்னென்ன கருத்துக்களைச் சொல்லலாம் என்பதைச் சிந்தித்ததைவிட, இங்கே என்னென்ன பேசக்கூடாது என்பதையே நான் அதிகமாகச் சிந்தித்தேன்.

"குடியரசு என்பது ஒரு அரசு முறையாகும்; இந்த அரசு முறை—'சர்க்கார்' என்ற உருது மொழிச் சொல்லுக்குரிய சரியான தமிழ்ச் சொல்லாகும். இந்த அரசு முறை—இன்று உலகில் 100-க்கு 90 பேர்களைக் கவர்ந்திருப்பதைக் காண்கிறோம்.

"உலகில் உள்ள பல்வேறு அரசு முறைகளிலும் இந்தக் குடியரசு முறையே சிறந்தது என ஒப்புக்கொள்ளப்பட்டிருப்பதையும் நாம அறிய வேண்டும்.

"'குடியரசு முறை என்பது மிகப் பழைய முறை; இது கிரேக்க நாட்டில் எத்தனையோ நூற்றுண்டுகளுக்கு முன்பே கூட நிலவியிருக்கும் முறையாகும்'—என்று கூறுவோர் ஒரு சாரார்! 'இல்லை; குடியரசு முறை நவீனகால முறை; புதியதொரு அரசு முறை'—எனக் கூறுவோரும் உண்டு.

"ஆனல், ஒன்று மட்டும் நிச்சயம்; குடியரசு முறை—பழைய முறையோ புதிய முறையோ—எப்படி இருந்தாலும், இன்னும் பூரணத்துவம் அடையவில்லை என்பது மட்டும் நிச்சயமாகும். குடியரசு முறை, தினம் தினம் வளர்ந்துகொண்டிருக்கும் ஒரு முறையாகும்.

"குடியரசின் வரலாற்றை நாம் பார்ப்போமேயானல், அந்த அரசு முறையில் குறைகள் இருப்பினும், அதனல் பலன் பெறுபவர்கள் மக்கள் என்பதை நாம் உணர்ந்துகொள்ள இயலும்.

"குறைகள் இருக்கின்றன என்பதைக் குடியரசு முறை பெருமையோடு ஒப்புக்கொள்ளுகிறது; ஆனல், குறைகள் இருந்தாலும் அவற்றை நீக்கிக்கொள்ளும் வாய்ப்புகளையும் நிரம்ப உடையது குடியரசு முறை என்பதை மறந்துவிடக் கூடாது.

"இராசாக்களின் ஆட்சியைவிட — சர்வாதிகாரிகளின் ஆட்சியைவிட குடியரசுதான் மக்களுக்கு உகந்தது என்பது, ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மையாகும்.

"குடியரசு என்ற முறையின்பால் உலக மக்களின் ஆர்வமும் கவர்ச்சியும் இருக்கிறது என்பதினல்தான் இன்று, உலகின் பல பகுதிகளிலும் பலரும், தங்கள் தங்கள் ஆட்சிக்குக் குடியரசு என்ற அடைமொழியும் இருப்பதுதான் பாதுகாப்பு என்ற நிலை நிலவுவதை நாம் காண்கிறோம்.

"குடியரசு என்ற வசீகரமான சொல்லை தங்கள் ஆட்சிக்கு அடைமொழியாகச் சூட்டிக்கொள்வதின் மூலம், பல பேரரசுகள்—உண்மையான குடியரசாக இல்லாதவை—பாதுகாப்புத் தேட முயற்சிப்பதையும் நாம் உணர வேண்டும்.

"குடியரசு முறை குறைபாடு உள்ளது என்பதை ஒத்துக் கொள்கிற பெருமையுடையது என்று கூறினேன். ஆனல், வேறு எந்த அரசு முறையும் இந்தப் பெருமையுடையது அல்ல! அரசனின் ஆட்சியிலோ, சர்வாதிகாரியின் ஆட்சியிலோ குறைகள் உண்டு என்பது ஒப்புக்கொள்ளப்படுவதில்லை; ஒப்புக் கொள்ளுவதென்பது இந்தக் குடியரசு முறைக்கு மட்டுமே உடைய தனிப் பெருமையாகும்.

"ஒவ்வொரு கிமிடமும் குடியரசு முறையில் குறைகள் உள்ளது எனக் காணப்படலாம்; ஆனல் மக்களின் அனுபவமும் அறிஞர்களின் துணையும், தோன்றுகிற குறைகளை நீக்கி முறையைச் செம்மைப்படுத்தி வந்திருக்கின்றன.

"உலகில் அவ்வப்போது ஏற்படும் மாற்றங்கள், புதிய குறைபாடுகளை உண்டுபண்ணுகின்றன; ஆனலும் அந்தக் குறைகள், வேறு எந்த அரசு முறையிலும் உள்ள பயங்கரமான

(4-ம் பக்கம் பார்க்க)

'உணவு உற்பத்தி 15 சதவிகிதமே அதிகரித்தது'

'32 சதவிகிதம் அல்ல'

உ. பி. கவர்னர் முன்ஷி ஒப்பம்

லக்னோ, ஆக. 20—

"முதல் ஐந்தாண்டுத் திட்டத்தினல் உணவு உற்பத்தி 15 முதல் 17 சதவிகிதம் மட்டுமே அதிகரித்திருக்க முடியும்; பிறர் கூறுவதைப் போன்று 32 சதவிகிதம் அல்ல"

என்று, உ. பி. கவர்னரும், ஒரு காலத்தில் மத்திய உணவு மந்திரியாகப் பதவி வகித்தவருமான கே. எம் முன்ஷி தெரிவித்திருக்கிறர்.

உணவுப் பொருள் இறக்குமதி செய்ய!

ரூ. 80 கோடி உப மானியம்

புதுடில்லி, ஆக. 20—

ஏறிக்கொண்டிருக்கும் விலையைத் தடுப்பதற்காக, உணவுப் பொருள்களைப் பெரும் அளவு சேமித்து வைக்கும் பொருட்டு அவற்றை இறக்குமதி செய்வதற்காக ரூ. 80.48 கோடிவரை மக்கள் சபை, சர்க்காருக்கு உப மானியம் வழங்கியிருக்கிறது.

அவசரப் பிரரேபணைக்கு அனுமதி மறுப்பு

புதுடில்லி, ஆக. 20—

ஆமதாபாத்தில் நீடித்து வருகின்ற நிலைமைகள் குறித்தும், பாராளுமன்ற உறுப்பினர்கள் திரு ஏ கே கோபாலன், எச் வி. காமத் ஆகியோர் மேற்படி கலவரப் பகுதிகளுக்குச் செல்ல அனுமதி மறுக்கப்பட்டது குறித்தும் விவாதிக்க வேண்டுமென்று கோரும் அவசரப் பிரரேபணை ஒன்றைக் கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர் ஒருவர் கொண்டுவந்தார். அதனை விவாதிக்க அனுமதி தரமுடியாதென சபைத் தலைவர் மறுத்துவிட்டிருக்கிறர்.

சர்க்காரின் கொள்கை அதுதானும்!

"அங்கீகாரம் பெறப்படாத இரயில்வே யூனியன்கள் எவையும் தெரிவிக்கும் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளக் கூடாது என்பதே சர்க்காரின் கொள்கை"

என்று, மத்திய இரயில்வே அமைச்சர் லால் பகதூர் சாஸ்திரி கூறியிருக்கிறராம்.

இருல்மீன் இறக்குமதிக்கு பர்மாவின் தடை

இந்திய சர்க்கார் கவனிக்கிறதாம்

புதுடில்லி, ஆக. 20—

"இந்தியாவிலிருந்து இருல் மீன் இறக்குமதி செய்வதற்குப் பர்மா சர்க்கார் விதித்திருக்கிற தடைகளைத் திரும்பப் பெறச் செய்வது குறித்து டில்லி சர்க்கார், சீக்கிரமே இந்தியா வரவிருக்கும் பர்மிய வர்த்தகத் தூதுக் குழுவிடம் விவாதிக்கும்,"

என்று, வர்த்தக இலாகா மந்திரி டி. பி. கார்மார்க்கர் மக்கள் சபையில் தெரிவித்துள்ளார்.

டில்லி வழங்கும் உபகாரச் சம்பளம்

சென்னை மாணவர்கட்கு ஓரவஞ்சனை

நேருவிடம் மக்கள்சபை உறுப்பினர்கள் முறையீடு

புதுடில்லி, ஆக. 20—

ஒற்றுமை உபதேசம் செய்யும் வடநாட்டு ஏகாதிபத்தியவாதிகள், தென்னடு வேறு—வடநாடு வேறு என்பதைத் தங்களின் ஒவ்வொரு நடவடிக்கை மூலமும் நிரூபித்துக் கொண்டிருப்பது நமக்கு மகிழ்ச்சியே!

டில்லி சர்க்கார், பின் தள்ளப்பட்ட வகுப்பினருக்குக் கல்விச் சலுகையாக உபகாரச் சம்பளம் தந்து வருகின்றனர்.

இப்படி உபகாரச் சம்பளம் பெறுவதற்கு சென்னையில் உள்ள பின் தள்ளப்பட்ட வகுப்பு மாணவர்கள் 60 சத விகித மார்க்குகள் பெறவேண்டும் என்று விதிக்கப்பட்டிருக்கிறதாம்.

ஆனல் அதே நேரத்தில், இதர மாநில மாணவர்கள் 50 அல்லது 55 சதவிகித மார்க்குகள் போதும் என்று விதிக்கப்பட்டிருக்கிறதாம்.

சென்னை மாணவர்களுக்கு, டில்லியின் உபகாரச் சம்பளம் கிடைப்பதில் காட்டப்படும் வேறுபாடு குறித்து சென்னை மாநிலத்திலிருந்து சென்றுள்ள 12 மக்கள் சபை உறுப்பினர்கள் நேருவிடம் முறையிட்டு, இந்தப் பாரபட்சத்தை விலக்குமாறு கேட்டுக்கொண்டிருக்கின்றனராம்.

ஏ. கே. கோபாலன் உண்ணாவிரதம் நீடிப்பு?

புதுடில்லி, ஆக. 20—

கடந்த வாரத்தில், அகமதாபாத்தில் விதிக்கப்பட்டிருந்த 144 தடை உத்திரவை மீறியதாகக் கைது செய்யப்பட்டு சபர்மதி சிறையில் வைக்கப்பட்டதும் உண்ணாவிரதம் மேற்கொண்ட இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவரான ஏ கே. கோபாலன் இன்னும் உண்ணாவிரதத்தை மேற்கொண்டு வருகிறர் என்றும், கடந்த 3 நாட்களுக்குள்ளாக அவருடைய எடை இரண்டு இராத்தல் குறைந்துள்ளது என்றும் தகவல் தரப்பட்டுள்ளது.

இன்று அவர், மாஜிஸ்திரேட் கோர்ட்டில் நிறுத்தப்பட்டிருக்கிறர்; அவர் மீதுள்ள குற்றப் பத்திரிகையைச் சீக்கிரமே தாக்கல் செய்யுமாறு மாஜிஸ்திரேட் உத்திரவிட்டுள்ளதாகவும் தெரிகிறது.

பூமிதான இயக்கம்

டில்லிக்கு நேரடியான சம்பந்தம் கிடையாதாம்

புதுடில்லி, ஆக. 20—

"பூமிதான இயக்கத்துடன் இந்திய சர்க்காருக்கு நேரடியான சம்பந்தம் எதுவுமே கிடையாது; ஆனலும் மாநில சர்க்கார்கள் அவ்வியக்கத்திற்குப் பலவிதமான உதவிகள் செய்திருக்கின்றனர்,"

என்ற தகவலை, மக்கள் சபையில் அமைச்சர் ஒருவர் குறிப்பிட்டிருக்கிறர்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தலைமை நிலையச் செய்தி :

மத்திய செயற்குழு

(Working Committee)

★

9—9—56 ஞாயிறு காலை 9-மணிக்கு, சென்னை—இராயபுரம் 'அறிவக'த்தில், தி. மு. கழக மத்திய செயற்குழுக் கூட்டம் நடைபெறும்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

நம் நாடு

சென்னை 21—8—'56 செவ்வாய்

புதைகுழி தோண்டுவோம்

'அற்புத சுகமளிக்கும் ஆராதனைகள்' 'தீராத வினை எல்லாம் தீர்த்து வைக்கும் கோவிந்தா'க்கள் இவற்றினால் எல்லாம் கூட குணப்படுத்த முடியாத, மருந்தே கண்டு பிடிக்கப்படாத பெரு நோய்க்கு ஆளாகிவிட்ட நோயாளி — திறமை வாய்ந்த, 'வெளிநாட்டு நிபுணர்' என்ற அடைமொழியும் பெற்ற எஞ்சினீயர்களாலும் பழுது பார்க்கப்படமுடியாத, 'ஒப்பேறி'விட்ட கன இயந்திரம் — இவைதான், அகில இந்திய காங்கிரசின் இன்றைய நிலையை விளக்குவதற்குரிய உதாரணங்களாகும்.

கடைந்தெடுத்த சுயநலம், முதல்தரமான பதவி வெறி, மக்கள் நலனை துச்சமென மதிக்கும் உன்மத்தம் முதலிய இன்னோரன்ன 'கல்யாண குண' விசேஷங்களைக் குறைவறப் பெற்ற பிற்போக்குவாதிகளின் ஆதிக்கத்திற்கு ஆட்பட்டுவிட்ட அரசியல் கட்சி ஒன்றுக்கு உலகில் எடுத்துக்காட்டு தேவை எனத் தேடுவோருக்கு, 'நான்தான் அந்த உதாரணத்திற்கு முற்றிலும் தகுதி வாய்ந்த'—பெருமைக்குரிய கட்சி' என்று அகில இந்திய காங்கிரஸ் பறைசாற்றிக் கொண்டிருக்கிறது!

கடந்த ஒன்பதாண்டுக் காலமாக 'ஆளும் கட்சி' என்ற கிடைத்தற்கரிய வாய்ப்பினைப் பெற்றிருந்தது அகில இந்திய காங்கிரஸ்; ஆனால், தனக்கு அந்தத் தகுதி தரப்பட்டது முற்றிலும் சரியானதல்ல என்பதையே அதன் இன்றைய நிலை தெளிவாகச் சொல்லுவதாக உள்ளது.

தனது சாதனைகள் என்று சுட்டிக்காட்டிப் பெருமைப்படுவதற்கு காங்கிரஸ் கட்சிக்கு உள்ளசிற்சிலயோக்கியதாம்சங்களைக்கூட கூறிப்பெருமைப்படுகிற நிலையை, சிறுசாதனைகளை உருவாக்குவதில் மலிந்துவிட்ட ஊழல்கள் பறித்துவிடுவனவாயுள்ளன.

இந்தியத் துணைக் கண்டம் முழுமையிலும் ஆட்சிப் பொறுப்பில் ஒன்பதாண்டுகளாக வீற்றிருந்துவரும் அகில இந்திய காங்கிரஸ் நீண்ட நெடிய எதிர்காலத்தில் முளைத்து வளரக்கூடிய பல அரசியல் கட்சிகளுக்கும், நிகழ்காலத்தில் ஜீவிப்பதற்காகப் போராடிக்கொண்டிருக்கும் ஓரிரண்டு சனநாயகக் கட்சிகளுக்கும் ஒரு வழிகாட்டியாக நடந்துகொள்ள வேண்டும் என்ற மகத்தானதோர் கடமை குறித்து கவலைப்பட்டதே இல்லை.

காங்கிரஸ் என்ற கலகலத்துப்போன கோட்டையின் கலசங்களாக—ஸ்தாபனத்தின் பிரகாசமான உச்சாணித் தலைவர்களாக விளங்குபவர்களே, "இந்தியா' என்பது ஒரே நாடு; அங்கு வாழ்வோர் அனைவரும் ஒரே தாய்வயிற்றுப் பிள்ளைகள்" என்ற கவர்ச்சிகரமான வாசகங்களை உணர்ச்சி ததும்ப கூறிக்கொண்டே, அந்த இந்தியாவின் தென்பகுதி மக்களை சகல துறைகளிலும் அடிமைப்படுத்தியும் அபிவிருத்தித் திட்டங்களில் ஓரவஞ்சனை புரிந்தும் வருகிற கொடிய மோசடிக்காரர்களாக இருக்கும்போது, அந்த ஸ்தாபனத்தின் இதர பாத்திரங்களை அலங்கரிக்கும் கனதனவான்களின் — 'தியாக சீலர்'களின் குறுகிய சுயநலத்தையும், பதவி வெறியையும் பற்றிச் சொல்லவே தேவையில்லையல்லவா?

பந்தயக் குதிரை வேகத்தில் அழிவுப் பாதையை நோக்கி, 'இராஜ நடை' போட்டுக் கொண்டிருக்கும் காங்கிரஸ், இன்னும் தனது சுயநலம், பதவி வெறி என்ற இரு கரங்களும் தோண்டி வைத்திருக்கும் புதைகுழியில் விழாமல் இருப்பதற்குக் காரணங்கள் இரண்டுதான் உண்டு; ஒன்று, 'அகில இந்திய'விலுமாக காங்கிரசிற்கு எதிராகச் சீரிய திட்டங்களும், அவற்றைச் செயல்படுத்தும் ஆற்றலும், மக்களின் நம்பிக்கையையும் பெற்ற மாற்றுக் கட்சிகள் எதுவும் இல்லாமை ஒரு காரணம்; மற்றொன்று, மக்களில் பெரும்பான்மையோரைக் கப்பியிருக்கும் அறியாமை இருள்!

இந்த இரண்டு பலவீனங்களும்தான் இன்றைய பிளவுகள் ஊழல்கள்—கோஷ்டிச் சண்டைகள் — சுயநலம்—மக்களை மதியாத திமிர்பிடித்த போக்கு முதலிய தீய அம்சங்கள் நிறைந்த காங்கிரசிற்குப் பக்கபலமாக — துணையாக நின்று காப்பாற்றி வருகின்றன.

'அகில இந்தியா' பேசுகிற அத்தனை கட்சிகளும் குறிப்பாக —பொதுவாழ்வில் அக்கறை கொண்ட பலரும் பொதுவாக —இந்த நிலையை, பொதுத் தேர்தல் நெருங்கிவரும் இந்தச் சமயத்தில் எண்ணிப்பார்க்கக் கடமையுடையவர்கள்.

திராவிடத்தை — தென்னாட்டைப் பொறுத்த மட்டில், குறிப்பாகத் தமிழ் நாட்டைப் பொறுத்த மட்டில், மக்களுக்கு உண்மையான விடுதலையோடு கூடிய நிரந்தரமான நல்வாழ்வு பெற்றுத்தரும் சீரிய இலட்சியமும், சிறந்த கொள்கைகளும், ஜனநாயகத்தில் அசையாத நம்பிக்கையும், நேர்மையில் பற்றும் நீதிவழி வழுவாப் பண்பும் கொண்ட கட்சி மக்களுக்குத் தலைமை ஏற்கத் தேவையான தகுதிகள் அத்தனையும் பெற்றகட்சி, ஏழாண்டுகளுக்கு முன் தோன்றி, மக்களின் நம்பிக்கையையும் பேராதரவையும் பெற்று வளர்ந்தோங்கித் திகழ்கிறது.

அந்தக் கட்சியான திராவிட முன்னேற்றக் கழகம், சகல அவலங்களுக்கும், கேடுகளுக்கும் இலக்காகியுள்ள காங்கிரசிற்கு அறைகூவல் விடுத்திருப்பதை உலக சனநாயக சக்திகள் அனைத்தும் விரும்பி வரவேற்கும் என்பதில் ஐயமில்லை.

உங்கள் குறிப்புக்கு!

புனர்வாழ்விப்பு நிதி நிர்வாகம் இடம் பெயர்ந்து வந்தவர்களுக்கு 1956 ஜூன் கடைசிவரையில் கடன் தொகைகளாக மொத்தம் சுமார் ரூ 1023·32 இலட்சம் விநியோகித்திருக்கிறது.

ஆளும் கட்சியை முறியடிக்க!

'எதிர்க் கட்சிகள் ஒன்றுபட வேண்டும்'

பி. சோ. கட்சி குருபாதசாமி கூறுகிறார்

பம்பாய், ஆக. 20—

"வரும் பொதுத்தேர்தலில் ஆளும் கட்சியை முறியடிப்பதற்காக எதிர்க்கட்சிகள் எந்தவிதத்திலேனும் ஒன்றுபடுவதை நான் முழுமையும் ஆதரிக்கிறேன்" என்று, பி. சோ. கட்சி மக்கள் சபை செயலாளரான எஸ். குருபாதசாமி எம். பி. தெரிவித்திருக்கிறார்.

"கடந்த தேர்தலில் ஆளும் கட்சி வெற்றிபெற்றதற்குக் காரணம் எதிர்ப்பு பல முனைகளாகச் சிதறியதும், ஓட்டுக்கள் பிளவுபட்டதும்தான்; எனவே, எதிர்க் கட்சிகள் ஒன்றுபட்டு தங்கள் ஆற்றலைத் திரட்டி காங்கிரசை முறியடிக்க முயற்சிப்பது தான் அரசியல் விவேகமாகும்" என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

'தவறு செய்தால் திருத்துங்கள்'

மைசூரின் புதிய முதன்மந்திரி வேண்டுகோள்

"நான் தவறான வழியில் செல்லும்போது, பத்திரிகையாளர்களே என்னைத் திருத்துங்கள்! என்னைத் திருத்த முற்படுமுன், உண்மைகளை அலசித் தெரிந்துகொண்டு பின் திருத்துங்கள்!" என்று, பதவி ஏற்றவுடன் பத்திரிகையாளரைச் சந்தித்த மைசூர் முதன் மந்திரி மஞ்சப்பா தெரிவித்திருக்கிறார்.

"அசாதாரணமான புத்திசாலி என்று நான் என்னைக் கருதவில்லை; காரியங்களை நேர்மையுடனும், பாரபட்சமின்றியும் செய்ய முயற்சிப்பேன் என்று மட்டும் நான் உறுதி கூறுகிறேன். நான் மிகக் குறுகிய காலத்திற்கே முதன் மந்திரியாயிருப்பேன்; அந்தக் காலத்தில் பெரும் சாதனைகள் எதையும் நான் சாதித்துவிட முடியாது நான் எத்தகையவன் என்பது மக்களுக்குத் தெரியும் என்றெண்ணுகிறேன்." என்றும், அவர் கூறியிருக்கிறார்.

அனுமந்தையா, நாலரை ஆண்டுகள் முதன் மந்திரியாயிருந்த பின் இப்போது இராஜிநாமாச் செய்தார்.

அனுமந்தையாவிற்கு முன், இப்போது மத்திய உற்பத்தி இலாகா மந்திரியாயிருக்கும் கே. சி. ரெட்டி மைசூர் முதன் மந்திரியாயிருந்தார்.

மஞ்சப்பா மந்திரி சபை, 'சுதந்திர'க் காலத்தின் மூன்றாவது மந்திரி சபையாகும்.

மேற்கு பாகிஸ்தான் அகதிகளுக்கு குடியமைப்புத் திட்டம்

இதுவரையில் கொடுக்கப்பட்ட உதவித் தொகை ரூ. 110 கோடி!

மாதந்தோறும் தரப்படும் ரூ. 2 கோடி உதவித் தொகையை 3 கோடியாக உயர்த்த முயற்சி?

அகதிகள் புனர்வாழ்வமைப்பு இலாகாவின் 'சாதனை' கண்டு அமைச்சர் கன்னா 'பெருமிதம்'!

புதுடில்லி, ஆக 20—

நகர்ப்புறங்களில் வாழும் மேற்குப் பாகிஸ்தானிலிருந்து வந்த அகதிகள் அனைவருக்கும், எதிர்பார்க்கப்பட்டுள்ள கால வரம்பிற்கு முன்னதாகவே உதவித் தொகை கிடைக்கக்கூடும் என்று தாம் நம்புவதாக மக்கள் சபையில், மத்திய அகதிகள் புனர்வாழ்வமைப்பு அமைச்சர் மேகர்சந்த் கன்னா கூறியிருக்கிறார்.

தற்போது இத்தகைய அகதிகளுக்கென சர்க்கார், மாதம் ஒன்றுக்கு 2 கோடி ரூபாய் உதவித் தொகையாகக் கொடுத்து வருகிறதாகவும், இதனை 3 கோடி ரூபாயாக உயர்த்தத் தாம் விழைவதாகவும் அவர் கூறியிருக்கிறார்.

[மாதம் ஒன்றுக்கு அகதிகள் புனர்வாழ்வமைப்புக்காக மாதம் ரூ. 3 கோடி செலவிடுவது என்று முடிவு செய்யப்படுமானால், அத்தொகை, நாளொன்றுக்கு இதற்காக ரூ. 10 இலட்சம் செலவிடுவதற்குச் சமமாகும் என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது.]

"கடந்த மாதம் இறுதிவரையில், 1,17,000 அகதிகள் ரூ. 35 கோடி உதவித் தொகையாகப் பெற்றிருக்கின்றனர். பணமாகவே கொடுக்கப்பட்ட ரூ. 22 கோடியும் இத்தொகையில் உள்ளடங்கும்," என்று தகவல்களையும் அவர் தந்திருக்கிறார்.

மேலும், அகதிகள் புனர்வாழ்வு அமைப்பிற்காக இன்றுவரை மொத்தமாக ரூ. 110 கோடி உதவித் தொகையாகத் தரப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்திருக்கிறார்.

மேலும் அவர் இது குறித்துப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"அகதிகளைப் புனர்வாழ்வு அமைப்பதில் என்னுடைய அமைச்சரவை இலாகா செய்திருக்கின்ற வேலைகள், எந்த ஒரு சர்க்காரும் பார்த்துப் பெருமைகொள்ளக் கூடிய ஒரு செய்கையாகும். இடம் பெயர்ந்த மக்களுக்குத் தந்த வாக்குறுதிகளை விட்டுப் பின்வாங்க சர்க்கார் நினைத்ததே இல்லை. அகதிகள் படும் துன்பங்களையும் துயரங்களையும் நான் நன்கு அறிவேன். அவர்களுக்குப் பண உதவிகளைச் செய்வதில் துரிதமான ஏற்பாடுகளை மேற்கொள்ளச் செய்வதற்கான தகுந்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறேன்."

கூட்டுக் குடும்பங்களுக்குத் தரப்படும் உதவித் தொகைகள் குறித்து அமைச்சர் மசோதா ஒன்று கொண்டுவந்திருக்கிறார்.

அதில், 2 அல்லது 3 உறுப்பினர்களடங்கிய கூட்டுக் குடும்பங்களுக்குத் தரப்படும் உதவித் தொகை 2, 3 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு அவரவர்களுக்குத் தரப்படும் என்றும், அந்தக் கூட்டுக் குடும்பங்கள் 4 அல்லது அதற்கும் அதிகமான உறுப்பினர்களைக் கொண்டதாக இருக்குமானால், கிடைக்கப்படும் தொகை 3 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு அவை மற்றவர்களனைவருக்கும் பகிர்ந்து கொடுக்கப்படும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒரு மணி நேரத்திற்கு ஒரு கொலை!

பீகாரில் ஆண்டுதோறும் 9,000 கொலைகளாம்

நிலையைக் காட்டி மரண தண்டனையை ஒழிக்கக் கூடாது என்கிறது சர்க்கார்

பாட்னா, ஆக. 19—

பீகார் மாநிலத்தில் நாள் ஒன்றுக்கு ஒரு மணிக்கு ஒரு கொலை வீதம் நடைபெறுகிறதாம்!

ஆண்டுதோறும் மாநிலத்தில் சராசரியாக 9 000 கொலைகள் நடைபெறுகின்றனவாம!

இந்தக் காரணத்தைக் கூறி, மாநில சர்க்கார், மரண தண்டனையை ஒழிக்கும் சூழ்நிலைகள் இன்னும் வரவில்லை' என்று டெல்லிக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்களாம்!

மலையாள உறுப்பினர்கள் வெளி நடப்பு!

நாராயண குருப் என்ற மலையாள உறுப்பினர் ஒருவர், மருமக்கதாய' குடும்பப் பிரிவினைச் சட்டத் திருத்த மசோதாவை சென்னை சட்டசபையில் பிரரேபித்தார்.

'இந்த மசோதாவை புதிய கேரள மாநிலம் அமைத்தான பின்னர் கவனித்துக் கொள்ளலாம்' என்று அமைச்சர் கூறி, திருத்தப் பிரரேபணையை மறுத்ததைத் தொடர்ந்து, எதிர்க் கட்சியைச் சேர்ந்த மலையாள உறுப்பினர்கள் அனைவரும் வெளிநடப்புச் செய்திருக்கின்றனர்.

உருக்கினாலேயே ஒரு நகரம் உருவாக்கப்பட்டிருக்கிறதாம்!

மாஸ்கோ, ஆக. 19—

காஸ்பியன் கடலில் எண்ணெய்க் கிணறுகள்கொண்ட பகுதியில் மனிதனால் உருவாக்கப்பட்ட ஒரு தீவில், உருக்கினாலேயே ஒரு நகரம் உருவாக்கப்பட்டிருகிக்கிறது.

நெப்டான்யா காம்னி என்ற பெயர்கொண்ட அந்த உருக்கு நகரத்தில், புதிய எண்ணெய்ப் பகுதி சுரங்க நிறுவனக் காரியாலயங்கள், திறந்தவெளி திரைப்பட அரங்கு, சிற்றுண்டிச்சாலை, மருத்துவமனை, படிப்பகம், மற்றும் கடைகள் முதலிய கட்டிடங்கள் அடங்கியுள்ளனவாம்.

அந்த நகரத்தைச் சுற்றிலும், 1500 மீடர் ஆழமான இடத்திலிருந்து எண்ணெய் கொண்டு செல்லும் குழாய்கள் போடப்பட்டிருக்கின்றனவாம்.

காஸ்பியன் கடலில், இந்த நெப்டான்யா 'நகருக்கு அருகாமையிலேயே இதுபோன்ற மற்றும் சில 'உருக்குத் தீவுகள்' ஏற்படுத்தப்பட்டுவருகின்றனவாம்!

சின்னங்கள் வேண்டுமானால்

புதிய கட்சிகள் சில நிபந்தனைகளைப் பூர்த்தி செய்ய வேண்டுமாம்!

நாடு முழுவதிலும் ஒரே சமயத்தில் வாக்கெடுப்பு நடத்தப்படுமாம்

வாக்காளர்களின் எண்ணிக்கை உயர்ந்துவிட்டிருக்கிறதாம்

அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் கூட்டம் டில்லியில் நடைபெறுமாம்

தலைமைத் தேர்தல் அதிகாரி சுகுமார் சென் தகவல்

சாந்திகார், ஆக. 20—

"கட்சிச் சின்னங்களில் மாற்றங்கள் ஏற்படுத்தும் யோசனை எதுவும் இல்லை. எந்த ஒரு புதிய கட்சியாவது, புதிய சின்னம் கோருமானால், அது, அவசியமான சில நிபந்தனைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும்."

"வாக்குச் சீட்டில் அபேட்சகர்களின் பெயர்களுக்கெதிராக சின்னங்களும் பொறிக்கப்படுவதுபற்றி ஆலோசிக்க பல்வேறு அரசியல் கட்சிகளின் பிரதிநிகளின் கூட்டமொன்று டில்லியில் கூட்டப்பட இருக்கிறது,"

என்று, இந்தியத் தலைமைத் தேர்தல் அதிகாரி சுகுமார் சென், பத்திரிகை நிருபர்களிடம் கூறிவிட்டு, மேலும் சொன்னார் :—

"இந்திய வாக்காளர்களின் எண்ணிக்கை கடந்த 5 ஆண்டுகளில் 5 சதவிகிதம் கூடியிருக்கிறது.

"கூடுமான அளவுக்கு அடுத்த பொதுத் தேர்தலில் நாடு முழுவதிலும் ஒரே சமயத்தில் வாக்கெடுப்பு நடத்தப்படும்.

"பனி அதிகமாக இருக்கக் கூடிய சில பகுதிகளைத் தவிர மற்ற இடங்களில் வாக்கெடுப்பு அடுத்த பிப்ரவரி 1-ம் தேதி முதல் 14-ம் தேதிக்குள் நடத்தப்பட்டு விடலாம்.

"தேர்தல் முடிவுகள் பிப்ரவரி முடிவுக்குள் தெரிந்து விடும். மாகாணப் புனரமைப்பு மசோதா சட்டமானவுடன் தொகுதி நிர்ணயக் குழு அமைக்கப்பட்டுவிடும். தொகுதி நிர்ணய அலுவல்கள் நவம்பர் முடிவுக்குள் முடிவடைந்து விடும்.

"தேர்தல் மறுப்பு மனுக்கள் சம்பந்தமாக ஒரு நீதிபதி, தேர்தல் நீதிமன்றங்கள், உயர்நீதி மன்றங்களுக்கு மறுப்பு மனுத் தரும் உரிமை, தேர்தல் குழுவுக்கு ஒரு நீதிமன்றத்திலிருந்து இன்னொரு நீதிமன்றத்துக்கு தேர்தல் வழக்குகளை மாற்றுவதற்கான அதிகாரம் ஆகியவைகளுக்கான சட்டத் திருத்தங்கள் செய்யப்பட்டு விட்டன.

ரூ. 20,000 செலவில்!

கரும்பிலிருந்து பழுப்பு சர்க்கரை தயாரிப்பதற்குத் திட்டம்

திருச்சி, ஆக 20—

கரும்பிலிருந்து பழுப்பு சர்க்கரையைத் தயாரிக்கும் திட்டம் ஒன்றினை சர்க்கார் அனுமதித்திருப்பதாகத் தெரியவருகிறது.

இத்திட்டம் பெரம்பலூர் தாலுகாவின் எல்லை பகுதிகளில் நடைபெறும் என்றும், குடிசைத் தொழிலாக ஆரம்பிக்கப்படும் இத்திட்டத்திற்கு மொத்தம் ரூ. 20 000 செலவாகும் எனவும், திட்டத்தின் குறிக்கோளான கரும்பிலிருந்து பழுப்பு சர்க்கரை தயாரிப்பிற்கான முறைபற்றி 6 மாத காலத்திற்குப் பயிற்சிபெறுவதற்கென 8பேர்கான்பூருக்கு அனுப்பப்பட்டிருக்கின்றனர் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

இது தவிர, கரூர் 'பிளாக் அபிவிருத்தி' பிரதேசத்தில் மாதிரி தோல் பதனிடும் சாலை ஒன்று ஆரம்பிக்கவும் சர்க்காரின் அனுமதி கிடைத்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

'இலங்கையில் தமிழ் அரசு மலர வேண்டும்'

'தமிழ்மொழிக்கு சமநிலை வேண்டும்'

இப்போதைய யூனியன் ஆட்சிமுறை ஒழிய வேண்டும்

திரிகோணமலை மாநாட்டு முடிவுகள்

திரிகோணமலை, ஆக. 19—

இலங்கைவாழ் தமிழ் மக்களுக்கு ஒரு பெடரல் ஆட்சியை ஏற்படுத்தித் தருவதற்கான ஏற்பாடுகளை ஓராண்டுக்குள் ஆட்சியிலிருப்போர் செய்யாவிட்டால், அமைதியான நேரடி நடவடிக்கையில் ஈடுபடுவதென இலங்கை பெடரல் கட்சியினர் தீர்மானித்திருப்பதாகத் தெரியவருகிறது.

இது குறித்த ஒரு தீர்மானம் கட்சியின் நான்காவது மாநாட்டில் நிறைவேறியிருக்கிறது.

"இப்போதுள்ள யூனியன் சர்க்கார் முறை இலங்கை போன்ற ஒரு இருமொழி நாட்டிற்கு ஏற்றதல்ல; ஏனெனில், மக்கள் சபையில் சிங்களவர்தான் பெரும்பான்மையினராக வர முடியும் என்பதால், 60 இலட்சம் சிங்களவரின் தயவிருந்தால் மட்டுமே 25 இலட்சம் தமிழர்கள் வாழமுடியும் என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. இதற்கு உதாரணம் வேண்டுமானால், இப்போது இலங்கையில் உள்ள ஆளும் கட்சி கடந்த தேர்தலின்போது தமிழ் பேசும் பகுதிகளில் ஒரு இடத்திற்குக்கூட போட்டியிடாமல் மக்கள் சபையில் பெரும்பான்மைக் கட்சியாக வந்துவிட்டிருக்கிறது என்பதே போதும்.

"சிங்களம் மட்டுமே ஆட்சிமொழி என்ற சட்டம், தமிழரின் வாக்குரிமை—சிவில் உரிமைகள் இவற்றைப் பறிக்கும் சட்டங்கள், பரம்பரையாகத் தமிழர்கள் வாழும் பகுதிகளில் சிங்களவரைக் குடியேற்றுவது, முதலியனவெல்லாம் சிங்களவரைப் போலவே இந்த நாட்டில் தொன்மையும் பெருமையும் மிக்க வரலாற்றைக்கொண்ட தமிழ் மக்களையும் அவர்களது கலாச்சாரத்தையும் அழித்து ஒழிக்க எடுத்துக்கொள்ளப்படும் முயற்சியாகும்.

"எனவே (1) இப்போதைய அரசியல் சட்டத்திற்குப் பதிலாக ஒரு சனநாயக சமஷ்டி அரசியல் சட்டத்தைக் கொண்டுவரவேண்டும்; (2) இலங்கையில் சிங்களத்தைப்போன்றே தமிழுக்கும் சம அந்தஸ்துத் தரவேண்டும்; 3) இப்போதுள்ள குடியுரிமைச் சட்டங்களுக்குப் பதிலாக புதிய சட்டங்கள் வேண்டும்; (4) பரம்பரையாகத் தமிழர்கள் வாழும் பகுதிகளில் சிங்களவரைக் குடியேற்றுவதை உடனடியாக நிறுத்த வேண்டும்,"

என்று, பெடரல் கட்சி மாநாட்டுத் தீர்மானம் கூறுகிறது.

தியாகராயர் கல்லூரியில் தோழர் ஈ.வெ.கி. சம்பத்

கல்லூரித் தலைவர் தலைமையில் 'குடியரசு' பற்றிச் சொற்பொழிவு

சென்னை, ஆக. 20—

இங்கு தியாகராயர் கல்லூரி நுண்கலை மன்றச் சார்பில், நேற்று காலை 10 மணியளவில் ஓர் சிறப்புக் கூட்டம் நடைபெற்றது.

நுழைவுக் கட்டணமாக ஒரு ரூபாய், அரை ரூபாய் அன்பளிப்புத் தந்து ஆயிரம் பேருக்கு மேல் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

பெரும்பாலும் கல்லூரி மாணவர்கள் நிறைந்த அந்தக் கூட்டத்திற்கு தியாகராயர் கல்லூரித் தலையாயர்-பேராசிரியர் ம. கி. சண்முகனார் அவர்கள் தலைமை தாங்கினார்.

கல்லூரிப் பொருளாதார விரிவுரையாளர் தோழர் க. அறிவழகன் அவர்கள், முதற்கண் அனைவரையும் வரவேற்று சிறிது நேரம் பேசினார்.

பின்னர், நுண்கலை மன்றச் செயலாளர் வேண்டுகோளுக்கு ஒப்ப கல்லூரித் தலையாயர் தலைமை ஏற்று, தன்னிடத்தில் பச்சையப்பன் கல்லூரியில் மாணவராகத் தோழர் சம்பத் பயின்றவர் என்றாலும், இன்று, தன் தலைமையில், தன் பழைய மாணவர் ஒருவர் பெரும் பொருள் ஒன்று குறித்துப் பேசுவது தனக்குப் பெருமை தருவதாகவும் கூறி தோழர் சம்பத் அவர்களைப் பேச அழைத்தார்.

'குடியரசு' என்ற தலைப்பில், தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள், சிறப்பானதோர் உரை நிகழ்த்தி, கூடியிருந்தோர் அனைவரின் சிந்தனைக்கும் அரியதோர் விருந்தளித்தார்.

துவக்கத்தில் தோழர் சம்பத் அவர்கள், தனக்கு கல்லூரி ஆசிரியராயிருந்த புலமைமிக்க பேராசிரியரின் தலைமையில் பேச வாய்ப்புக் கிடைத்தது பெருமை தருவதென்றும், அந்த வாய்ப்புக் கிடைத்தமைக்காக நன்றி தெரிவித்துக் கொள்வதாகவும் குறிப்பிட்டார்.

முடிவுரை கூறிய தலைவர் அவர்கள், தோழர் சம்பத் ஆற்றிய சொற்பொழிவு தனக்கு ஆச்சரியமூட்டியதாகவும், 'குடியரசு' போன்ற நுண்ணிய அரசியல் தலைப்புகள் குறித்து தமிழ் மொழியிலும் சீரிய விளக்கம் தரமுடியும் என்பதை தோழர் சம்பத்தின் சொற்பொழிவு மூலம் தான் அறிந்துகொண்டதாயும் கூறி, தன்னுடைய மகிழ்ச்சி நிறைவைத் தெரிவித்துக்கொண்டனர்.

துவக்கத்தில், தோழர் சம்பத்திற்கும், தலைவருக்கும் மன்றச் சார்பில் மாலைகள் அணிவிக்கப்பட்டன.

மன்றச் செயலாளர் நன்றி கூற கூட்டம் இனிது முடிவுற்றது.

(ச. நி.)

ராக்பெல்லர் நிறுவனத்தின் உதவி

இந்தியாவிலுள்ள மூன்று மருத்துவக் கல்லூரிகளுக்கு ரூ. 43,95,320

நியூயார்க், ஆக. 20—

இந்தியாவில் மூன்று மருத்துவக் கல்லூரிகளுக்கு—சென்னை மாநிலத்தில் வேலூரிலுள்ள கிறித்தவ மருத்துவக் கல்லூரி, லக்னோவில் உள்ளஜியார்ஜ் அரசர் மருத்துவக் கல்லூரி, பம்பாயிலுள்ள சேத் கோர்டன்தாஸ் சுந்தர்தாஸ் மருத்துவக் கல்லூரி—ஆகிய கல்லூரிகளுக்கு, அமெரிக்காவிலுள்ள ராக்பெல்லர் நிறுவனம் 1956-ம் ஆண்டின் இரண்டாவது கால் ஆண்டுக் காலத்திற்கு நன்கொடையாக ரூ. 48,95,820 அளித்திருக்கிறது.

அக்கல்லூரி மருத்துவமனைகளின் ஊழியர்களுக்குத் தேவையான ஊதியம், நோயாளிகளைக் கவனிப்பதற்குத் தேவையான அளவுக்குப் பயிற்சிபெற இன்னும் அதிகமான மாணவர் சேர்த்துக் கொள்ளப்பட்டு அவர்களுக்குத்தரப்படும் மருத்துவ முறைபோதனையின் தர உயர்வு, இந்தியாவின் அடிப்படை மருத்துவப் பிரச்சினைகளுக்கான ஆராய்ச்சிகளுக்கு ஊக்கம் கொடுப்பது ஆகிய முக்கிய மூன்று காரணங்களுக்காகவே அந்த ராக்பெல்லர் நிறுவனப் பரிசுகள் தரப்படுகின்றன என்றும் விவரம் தரப்பட்டிருக்கிறது.

மேற்படி மூன்று கல்லூரிகளில் சென்னை மாநிலத்தைச் சேர்ந்த வேலூர் கிறித்தவ மருத்துவக் கல்லூரிக்கு ரூ. 16,85,600-ம், லக்னோஜியார்ஜ் அரசர் மருத்துவக் கல்லூரிக்கு ரூ. 18,75 000-மும் 10,000 டாலரும் (ரூ. 47600)-ம் கொடுக்கப் பட்டிருக்கின்றனவாம். பம்பாயிலுள்ள மருத்துவக் கல்லூரிக்கு இரண்டு வருடங்களுக்குப் பிறகு ரூ 3,50,000-மும், 5 வருடங்களுக்குப் பிறகு ரூ, 9,37 720ம் கொடுக்கப்படுமாம்.

புனாவிலுள்ள 'டெக்கான் கல்லூரி, போஸ்ட் கிராஜுவேட் புதுகண்டு பிடிப்பு நிலைய'த்திற்கு, இந்தியாவிலுள்ள பலவகையான முக்கிய மொழிகள் குறித்துப் பயிற்சியும், விரிவான அறிவும் பெறச்செல்வதற்கென. ராக்பெல்லர் நிறுவனம். 1,26,775 பவுன்கள் (ரூ. 24,13707) கொடுப்பதாகத் தெரிகிறது.

ஆக்ரா பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பல்வந்த் ராஜ்புட் கல்லூரிக்கு, கிராமாந்திரங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு உதவவும், 436 ஏகர் பரப்பளவுள்ள ஒரு பரிசோதனை விவசாய அபிவிருத்தி மத்திய நிலையம் அமைக்கவுமாக அந்நிறுவனத்தால் ரூ. 3.80,00 கொடுக்கப்பட இருக்கிறதாம்!

இவைகளைத் தவிர மிஷனரிகளின் ஆதரவுடன் இயங்கிவரும் லூதியானாவில் உள்ள கிறித்துவ மருத்துவப்பள்ளி ஒன்றுக்கு, தடுப்பு மருந்துகள் பற்றிய போதனை முறைகளுக்கான பரிசோதனைகளுக்காக, வருகிற 3 ஆண்டுகளுக்கு ரூ. 1,42,800 அளிக்கப்படுமெனவும் அந்நிறுவனம் அறிவித்திருக்கிறது.

1955—56ல், 20 06 லட்சம் ஏக்கர் நிலத்தில் ஜப்பானிய நெல் சாகுபடி முறை கையாளப்பட்டிருக்கிறது.

சென்னை சர்க்கார் உத்தேசம் என்ன?

20,000 அம்பர் இராட்டைகள் ஏற்படுத்த முயற்சியா?

சென்னை, ஆக. 20—

"இந்த ஆண்டில் இந்தியா முழுவதிலும் ஏற்படுத்தப்படவிருக்கும் 75 ஆயிரம் அம்பர் இராட்டைகளில், சென்னை மாகாணத்தில் 20 ஆயிரம் அம்பர் இராட்டைகளை ஏற்படுத்த சென்னை அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது.

"இதற்காக, எத்தனை பயிற்சி நிலையங்களைத் திறக்க வேண்டும் என்பது குறித்து அரசாங்கம் யோசித்து வருகிறது. கதர் வளர்ச்சியில் தீவிர பங்குகொண்டுள்ள வட்டாரங்களில் அம்பர் இராட்டைகள் ஏற்படுத்தப்படும்,"

என்று, சென்னை சட்டசபையில், அமைச்சர் பக்தவத்சலம் கூறியுள்ளார்.

பின்தள்ளப்பட்ட வகுப்பினர் பட்டியல்

சபையில் தாக்கல் செய்ய உறுப்பினர் கோரிக்கை

'இரகசியமாக வைக்கப்பட்டுள்ளது'—அமைச்சர்

சென்னை, ஆக. 20—

மாநிலத்தில் உள்ள பின் தள்ளப்பட்ட வகுப்பினர்களுக்கான திருத்தப்பட்ட பட்டியல், பின்தள்ளப்பட்ட வகுப்பு 'கமிஷனு'க்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாக மந்திரி பரமேசுவரன், சென்னை சட்டசபையில் தெரிவித்திருக்கிறார்.

பட்டியலின் நகல் ஒன்றை சபையில் தாக்கல் செய்யுமாறு கோரிய உறுப்பினர் ஒருவருக்கு பதிலளிக்கும்போது மந்திரி, 'அது தற்போதைக்குப் பெரும் இரகசியமானதாக வைக்கப்பட்டிருக்கிறது' என்று கூறியிருக்கிறார்.

இந்த நிலை இன்னும் எத்தனை நாள்?

சென்னை, ஆக. 18—

"சென்னை—ஆந்திர மாநிலங்களிடையே இருந்துவரும் எல்லைத் தகராறைத் தீர்த்துவைப்பதற்கென ஆந்திர சர்க்கார் கையாள உத்தேசித்திருக்கின்ற கொள்கை எவ்வகையிலும் உதவிகரமாயிருக்காது; ஏற்கனவே நடந்திருப்பதையொட்டி, அப்போது ஒப்புக்கொண்டபடி மேலும் தொடர்ந்து நடந்து கொள்வதுதான் இந்தத் தகராறை சுமூகமான முறையில் தீர்த்துவைக்க உதவக் கூடியதாகும்"

என்று அமைச்சர் சுப்பிரமணியம் சென்னை சட்டசபையில், ஆந்திர—சென்னை மாநில எல்லைத் தகராறுகள் குறித்து நடைபெற்ற விவாதத்திற்குப் பதிலளித்துப் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

சென்னைக்குப் புத்தி புகட்டுகிறது ஆந்திரம்?

விசைத் தறிகளைப் புகுத்துவதற்கு எதிர்ப்பு

கர்னூல், ஆக. 19—

கைத்தறித் துறையில் விசைத்தறிகளைப் புகுத்துவதற்கு எதிரானதோரு முடிவை ஆந்திர சர்க்கார் மேற்கோண்டிருக்கிறார்கள் எனத் தெரியவருகிறது.

இது, டில்லியின் புதிய ஜவுளிக் கோள்கைக்கு எதிராகப் போராடிவரும் நெசவாளர் காங்கிரசிற்குப் பெரும் வெற்றியாகும்என்று கருதப்படுகிறது.

நெசவாளர் தூதுக் குழு ஒன்று முதன் மந்திரி பி. கோபால ரெட்டியையும் இதர அதிகாரிகளையும் சந்தித்து, விசைத்தறி புகுத்தும் திட்டத்தைத் தாங்கள் எதிர்ப்பதாக மகஜர் ஒன்று தந்திருக்கின்றனர்.

"சேலை—வேட்டி செய்வதைக் கைத்தறிகளுக்கே ஒதுக்கவேண்டும் என்ற கோரிக்கையைப் புறக்கணித்துவிட்ட கனுங்கோ குழு சிபாரிசுகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ள புதிய ஜவுளிக் கொள்கை, படிப்படியாக 25 ஆண்டுகளில் கைத்தறிகளை ஒழித்து 25 இலட்சம் பேர்களை வேலையில்லாது திண்டாடச் செய்வதாகும்.

"சேலை—வேட்டி உற்பத்தி உரிமை கைத்தறிகளுக்கே இருக்கவேண்டும் என்ற கோரிக்கை, மாநில சர்க்காராலும் சட்டசபையாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு ஆதரிக்கப்பட்டதாகும்.

"மற்றும், நியாயமான விலையில் போதுமான நூல் தந்தும், நெய்த துணிகளுக்கு மார்க்கெட் தேடித் தந்தும் 28 இலட்சம் நெசவாளருக்கு வாழ்வு தாருங்கள் என்று மாநில சர்க்கார் மத்திய சர்க்காரைக் கோரியிருந்தது.

"ஆனால் மத்திய சர்க்காரோ, ஆலைத் தொழில் பாதிக்கப்படும் எனக் கூறி, இந்தக் கோரிக்கைகளை ஏற்க மறுத்துவிட்டிருக்கிறது.

"மேலும் இப்போது ரூ. 7 கோடி செலவில் 35,000 விசைத் தறிகளைப் புகுத்தத் திட்டமிடுகிறது. இப்படிப் புகுத்துவதினால் பல லட்சம் நெசவாளர் வேலை இழப்பர். அதிகமான பேருக்கு வேலை தேடித் தருவது என்ற இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் நோக்கம் தோல்வியுறும்,"

என்று நெசவாளர்கள், சர்க்காரிடம் தந்த மகஜரில் கூறப்பட்டுள்ளது.

40 பரிசிரமாலயங்கள்

8,500 அம்பர் இராட்டைகள்

டில்லிக்கு அடிபணிவதில் சென்னை சர்க்கார் தீவிரம்

சென்னை, ஆக. 20—

சென்னை சர்க்கார், சுமார் 2,000 அம்பர் இராட்டைகளை உற்பத்தி செய்ய உத்தரவிட்டுவிட்டார்களாம்.

அம்பர் சர்க்காவில் வேலை செய்வது எப்படி என்பதைக் கற்றுத் தருவதற்கும், 5 'பரிசிரமாலயங்'களையும் திறவ அனுமதி தந்தாயிற்றாம்.

இப்போது 'பரிசிரமாலயங்' களின் எண்ணிக்கையை 40 ஆக உயர்த்தவும், சுமார் 8,500 அம்பர் இராட்டைகள் உற்பத்தி செய்யவும் திட்டமிட்டாயிற்றாம்.

ஒவ்வொரு அம்பர் இராட்டை செய்ய ரூ. 100 செலவாகுமாம்.

சர்க்கார், அதிகாரிகள் பலரையும் கூட்டிவைத்து அம்பர் இராட்டை உற்பத்தி பற்றியும் 'பரிசிரமாலயங்கள் பற்றியும் விவாதித்ததாம்.

★

சென்னை சர்க்கார் விசைத்தறியைப் புகுத்த ஒப்புக்கொண்டதேன்?

நெசவாளர் நலனில் அவர்கள் உண்மையில் அக்கரை கொண்டவர்களா?

ஆந்திர நெசவாளர் காங்கிரஸ் செயலாளர் இடித்துரை

நிடுப்ரூலு, ஆக. 21—

"விசைத்தறியைப் புகுத்துவதும் ஆலைத் தொழிலை விரிவாக்குவதும், கைத்தறிகளைப் பாதிக்கும்; இலட்சக்கணக்கான நெசவாளர்களை வேலை இழக்கச் செய்யும்; இந்த நிலை தெரிந்தும் ஏன் சென்னை சர்க்கார், விசைத் தறிகளைப் புகுத்த ஒப்புக் கொண்டார்களோ தெரியவில்லை.

"உண்மையில் மாநில சர்க்கார்கள் கைத்தறிகளில் அக்கரை கொண்டவர்களானால், விசைத் தறிகளைப் புகுத்துவதை அவை எதிர்க்க வேண்டும்; சேலைகள், வேட்டிகள் உற்பத்தியை கைத்தறிக்கே பிரத்தியேகமாக ஒதுக்கித் தருமாறு, டில்லி சர்க்காரை வற்புறுத்த வேண்டும்"

என்பதாக, நெசவாளர் காங்கிரசின் செயலாளரான பிரகதா கோட்டையா என்பார் கூறியிருக்கிறார்.

ஈ.வெ.கி. சம்பத் விளக்கம்

[1-ம் பக்கத்தின் தொடர்ச்சி]

குறைபாடுகளைப் போன்றவை அல்ல!

"இராசா அரசு முறையிலோ, சர்வாதிகார அரசு முறையிலோ ஏற்படக்கூடிய பயங்கரமான குறைகளை அகற்றுவதற்கு மக்களுக்கு வாய்ப்பும் உரிமையும் இல்லாது போய்விடுகின்றது.

"புகைப்படம் எடுப்பதற்கு ஒளி பொருந்திய விளக்குகள் ஒரே முறை பயன்படுவதுபோல, மக்கள் தங்கள் உரிமையை—வாய்ப்பை ஒரே முறை பயன்படுத்தி ஒரு சர்வாதிகாரியை உருவாக்கிவிட்டால், பின்னர் அந்தச் சர்வாதிகாரியின் ஆட்சியில் ஏற்படும் பயங்கரமான குறைகளைக் களைவதற்கு வழி தெரியாமல் தவிக்கின்றனர் என்பதையும் நாம் காண்கிறோம். ஆனால், ஏற்படுகிற குறைகளை அவ்வப்போது களைவதற்கு உரிமையும் வாய்ப்பும் குடியரசு முறையில் மட்டுமே மக்களுக்குக் கிடைக்கும் பாதுகாப்பாகும்.

"குடியரசு முறை குறித்துக் குறைகூறுவோர் 'மக்கள் எல்லாம் அறியாமையில் இருப்பவர்கள்; அவர்கள் கையில், அரசு நிர்ணய உரிமையை வழங்குவது நல்லதல்ல' என்று குறைப்படுகிறார்கள்.

"இதற்கு, அமெரிக்காவின் குடியரசு நிர்மாணத்திற்காகப் பாடுபட்டு வெற்றி பெற்ற ஜெபர்சன் என்ற அறிஞன் பதில் சொல்லியிருக்கிறான்.

"'மக்கள் நிர்வாக, அரசு முறை தெரியாதவர்களாக இருக்கலாம்; உண்மைதான். ஆனால், நிர்வாக முறை தெரிந்தவனாக இருக்கிறான் என்பதற்காக மக்களுக்கு அப்பாற்பட்ட ஒருவனிடத்தில், மக்களை ஆளும் அதிகாரங்களைத் தந்தால் அவன் அவற்றைத் தனது சுயநலத்திற்கு உபயோகித்துக் கொள்ளும் அபாயமிருக்கிறது. இதைவிட, அறியாத மக்களிடத்திலேயே அந்த அதிகாரங்களை ஒப்படைப்பது நல்லதல்லவா?'—என்று, ஜெபர்சன் பதிலிறுத்திருக்கிறான்.

"மக்களுடைய பொதுவிருப்பத்திற்கு மரியாதை தந்து, மக்களுக்காக—மக்களின் பிரதிநிதிகளால் அமைவதே குடியரசு முறையின் அடிப்படையாகும்.

"இந்த நேரத்தில் நாம் ஒன்றை மறந்துவிடுதல் கூடாது; பெயரளவில், 'சுதந்திர ஜனநாயகக் குடியரசு—மக்கள் ஜனநாயகக் குடியரசு' என்று ஒரு ஆட்சி தன்னைப் பிரகடனப்படுத்திக்கொள்வதினாலேயே அது ஒரு உண்மையான குடியரசாகிவிட முடியாது"

—என்று, தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள், சென்னை தியாகராயர் கல்லூரியில், கடந்த 19—8—56-ல் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசும்போது குறிப்பிட்டார்.

[பேச்சு முடியவில்லை. தொடர்ந்து வரும்]

விசைத்தறி புகுத்துவதற்கு ஆச்சாரியார் எதிர்ப்பு!

கிளர்ச்சியிலீடுபடுமாறு நெசவாளர் காங்கிரசிற்கு உபதேசம்

விசைத்தறிகளைப் புகுத்தும் திட்டத்திற்கு ஆச்சாரியார் எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறாராம்.

பிரகதாகோட்டையா என்பவருக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில் அவர் குறிப்பிட்டுள்ளதாவது:—

"விசைத்தறிகளைப் புகுத்தும் திட்டம் வேலையில்லாத் திண்டாட்டத்தையே அதிகரிக்கும் என்ற நெசவாளர் காங்கிரசின் கருத்தை நான் ஆதரிக்கிறேன்.

"'கிளர்ச்சி செய்யுங்கள்! போராடுங்கள்! போராடுங்கள்—உள்ளம் தளராதீர்!' என்று இந்தியாவின் பழம் பெரும் மனிதரான தாதாபாய் நௌரோஜி வேறொரு விவகாரத்திற்குக் குறிப்பிட்டதையே உங்களுக்கு சொல்வதைத் தவிர நான் வேறென்ன செய்ய முடியும்?"

★

'அம்பர் சர்க்கா திட்டம் துணி உற்பத்திச் செலவை அதிகரிக்கும்'

'பொருளாதார நிலையைச் சீர்குலைக்கும்'

புதுடில்லி, ஆக. 20—

"அம்பர் சர்க்கா குறித்துக் கருத்தறிவிப்பதற்காக வரவழைக்கப்பட்ட மேற்கு ஜெர்மன் ஜவுளி ஆலை எஞ்சினீயர் டாக்டர் எட்டர் என்பார், பெரிய அம்பர் சர்க்கார் திட்டத்தினைப் புகுத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறார்"

என்று, உற்பத்தி மந்திரி கே. சி. ரெட்டி மக்கள் சபையில் கூறியிருக்கிறார்.

"அம்பர் சர்க்கா நூலைக் கொண்டு உற்பத்தி செய்யப்படும் துணி பலருக்கு அதிக விலையாகத் தோன்றும்; அதிகமான உற்பத்தி இல்லாத நிலையில், அம்பர் சர்க்காவில் வேலை செய்பவர்களுக்கு அதிகச் சம்பளம் தருவது, துணி உற்பத்திச் செலவை அதிகரிக்கும்; பின்னர் அது, நாட்டின் பொருளாதாரத்தையே மிகவும் பாதிக்கும்.

"இப்போதுள்ள தனது நிதி நிலையில் இந்தியா, அது போன்று துணி உற்பத்திக்கு நீண்ட நாட்களுக்கு மானியம் வழங்கிக்கொண்டிருக்க முடியாது"

என்றும், டாக்டர் எட்டர் தனது அறிக்கையில் கூறியிருப்பதாக மந்திரி தெரிவித்திருக்கிறார்.

★

'க்ஷயரோகக் கிருமிகளைச் செலுத்துவது போலாகும்'

விசைத்தறியைப் புகுத்துவதற்குக் கண்டனம்

சீராளா, ஆக. 20—

"நெசவாளர்களுக்கிடையே விசைத்தறியைப் புகுத்துவது கைத்தறித் தொழிலில் க்ஷயரோகக் கிருமிகளைச் செலுத்துவது போலாகும்; விசைத்தறிகளைப் புகுத்துவதனால் குடிசைத் தொழிலுக்கு அபாயமே ஏற்படும்; எனவே, இந்த உத்தேச ஏற்பாட்டைக் கைவிடவேண்டும்.

"500 விசைத்தறிகளை இயக்குவதற்கு 5 நெசவாளர்கள் போதும்; ஆனால், 10,000 நெசவாளர்களுக்கு வேலையில்லாது போய்விடும்"

என்று, அ. இ. கைத்தறி போர்டு உறுப்பினரும், ஆந்திரா கைத்தறி நெசவாளர் சங்க துணைத் தலைவருமான எம். சோமப்பா அவர்கள் இங்கு பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

********-*********-*

தேர்தல் நிதி

மதுரை தி. மு. கழக ஆதரவாளர் திரு. பி. சுந்தரம் (நாடார்) அவர்கள், தேர்தல் நிதிக்காக அண்ணா அவர்கள் மூலம் ரூ. 51 நன்கொடை அளித்துள்ளார்கள்.

★

பண்ணைக்காடு தி. மு. கழகத்தின் உதவி

மதுரை மாவட்டம், பண்ணைக்காடு தி. மு. கழகச் சார்பில் 15-8-56 அன்று நடைபெற்ற தி. மு. கழக ஆண்டுவிழாக் கூட்டத்தில் துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன் அவர்களிடம் ரூ. 50 அளிக்கப்பட்டது.

★

கோவை நகர தி. மு. கழகத்தின் உதவி

15—7—56 அன்று கோவை சிதம்பரம் பூங்காவில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தேர்தல் நிதிக்காக பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களிடம் கோவை நகர தி. மு. கழகம் மூலமாக ரூபாய் 30 அளிக்கப்பட்டது.

********-*-*********

துணைப் பொதுச்செயலாளர்

என். வி. நடராசன்

நிகழ்ச்சிகள்:

★

ஆக. 25 : சென்னை—சேத்துப்பட்டு
26 : காலை-திருக்கழுக்குன்றம்
பிற்பகல்-காஞ்சீபுரம்
மாலை-செங்கற்பட்டு
27 : தேனாம்பேட்டை
29 : சென்னை பஸ் தொழிலாளர் சங்கபொதுக் கூட்டம்

அண்ணா

நிகழ்ச்சிகள்

ஆகஸ்டு
24 : உத்திரமேரூர்
25 : சென்னை-சேத்துப்பட்டு
26 : ,, புளியந்தோப்பு
27 : ,, தேனாம்பேட்டை

கழகக் கூட்டம்

★

புழல் :
22—8—56 மாலை 6 மணிக்கு

தலைவர் :
தா. முருகானந்தம்

பேசுவோர்:
மு. கருணாநிதி
டி. வி. நாராயணசாமி

பஸ் ரூட் : 57 ; 58

செங்கற்பட்டு மாவட்ட

திராவிட முன்னேற்றக் கழக

உறுப்பினர் கூட்டம்

'26—8—56 பகல் 2-மணியளவில், காஞ்சீபுரம் 'திராவிட நாடு' அலுவலகத்தில், துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் தலைமையில், செ. மா. தி. மு. க. உறுப்பினர் கூட்டம் நடைபெறும்.

அதுபோது, மாவட்டச் செயலாளர் இராஜிநாமா-புதுச்செயலாளர் தேர்தல் ஆகியவை ஆய்வுக்கு வரும்"

என்று, செ. மா. தி. மு. கழகத் துணைச்செயலாளர் தோழர் வகாப் அவர்கள் அறிவிக்கிறார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.